பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

06 10 2024 **SUNDAY** **7.15 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சென்னை மெரினா கடற்கரையில் இன்று நடைபெற்ற இந்திய விமானப்படையின் வான் சாகச நிகழ்ச்சியை லட்சக்கணக்கானோர் கண்டு ரசித்தனர்.

2. மாலத்தீவு அதிபர் திரு முகமது **Muizzu** ஐந்து நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

3. இந்தோ – பசிபிக் மண்டலத்தில் குவாட் அமைப்பு முக்கிய மாற்றங்களை செய்து வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

4. இலங்கையில் 2019-ஆம் ஆண்டு ஈஸ்டர் பண்டிகையின்போது நடத்தப்பட்ட வன்முறை தாக்குதல் குறித்து உரிய விசாரணை மேற்கொள்ளப்படும் என்று அந்நாட்டு அதிபர் திரு அனுர குமார திசநாயகே தெரிவித்துள்ளார்.

5. உலகக்கோப்பை மகளிர் ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி ஆறு விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

--- *இனி விரிவான செய்திகள்* ----

<<<<<>>>>>

இந்திய விமானப் படையின் 92-வது ஆண்டு தினத்தை முன்னிட்டு, சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற விமானப்படையினரின் வான் சாகச நிகழ்ச்சியை லட்சக்கணக்கானோர் கண்டுகளித்தனர்.

இந்த சாகச நிகழ்ச்சியில் இந்திய விமானப் படையின் **Chetak, Rafale, Dakota, Harvard, MIG, Poseidon-31, Herculus** ரக விமானங்களும், ஜாகுவார், தேஜஸ், சுகோய் 30 ரக விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டன.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், மாநில அமைச்சர்கள், இந்திய விமானப்படை முதன்மை ஏர் கமோடோர் அமர்ப்ரீத் சிங் மற்றும் முப்படைகளின் உயரதிகாரிகள் மற்றும் மாநில அரசு அதிகாரிகள் சென்னை மெரினா கடற்கரையில் அமைக்கப்பட்ட சிறப்பு மேடையில் அமர்ந்து இந்த சாகச நிகழ்ச்சியை பார்வையிட்டனர்.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலினுக்கு, விமானப்படை முதன்மை ஏர் கமோடோர் அமர்ப்ரீத் சிங் நினைவு பரிசு வழங்கினார்.

இதுகுறித்து தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நமது இந்திய விமானப்படை வீரர்கள் வானில் நடத்திய கண்கவர் சாகச நிகழ்ச்சியை சென்னை நகரமே கண்டு களித்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

மாலத்தீவு அதிபர் திரு முகமது **Muizzu** ஐந்து நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

மாலத்தீவு அதிபராக பதவியேற்றபின், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்த அழைப்பை ஏற்று இந்தியா வந்துள்ள திரு **Muizzu** –வை, வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங், புதுதில்லி விமான நிலையத்தில் வரவேற்றார்.

அவரது வருகை குறித்து வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்தியா – மாலத்தீவு இடையிலான இருதரப்பு உறவுகள் மேம்படுத்துவதற்கு இந்த பயணம் வாய்ப்பாக அமையும் என்று கூறியுள்ளார்.

இன்று மாலை வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், மாலத்தீவு அதிபரை சந்திக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் உயரதிகாரிகளையும், திரு முகமது **Muizzu** சந்தித்து பேசவுள்ளார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நாளை நடைபெறும் சிறப்பு விருந்திலும் அவர் கலந்துகொள்கிறார்.

ராஜ்காட்டில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் நாளை அவர் அஞ்சலி செலுத்தவுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கரையும், மாலத்தீவு அதிபர் சந்தித்து பேசுகிறார்.

<<<<<>>>>>

மரபு சார்ந்த அமைப்பு ரீதியிலான ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டியது அவசியம் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று மூன்றாவது கௌடில்யா பொருளாதார உச்சி மாநாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது இதை தெரிவித்த அவர், குவாட் அமைப்பு மரபு சார்ந்த ஒத்துழைப்பை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை வகுத்துள்ளதாக குறிப்பிட்டார்.

இந்தோ - பசிபிக் மண்டலத்தில் முக்கியமான மாற்றங்களை செய்யும் ஒரு வலுவான கட்டமைப்பாக குவாட் அமைப்பு திகழ்ந்து வருவதாகவும் அவர் கூறினார்.

உலகளாவிய அரசியலுக்கு ஏற்ற வகையில், இந்தியா முழு ஒத்துழைப்பை அளித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தோ — பசிபிக் மண்டலத்தில் நிலவும் முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்பட வேண்டியது அவசியம் என்று அவர் கூறினார்.

ஐ நா சபையில் காலத்திற்கு ஏற்ப சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று வலியுறுத்திய அமைச்சர், இந்த அமைப்பை ஆக்கப்பூர்வமாக செயல்படுத்துவதற்கு அனைத்து நாடுகளும் ஒத்துழைப்பு தர வேண்டும் என்று குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பயன்பாடு, தவிர்க்க இயலாத ஒன்று என்று குறிப்பிட்ட திரு ஜெய்சங்கர், இதனை முறையாக பயன்படுத்த வேண்டியது அவசியம் என்றும் கூறினார்.

கௌடில்யா பொருளாதார உச்சிமாநாட்டில் 150-க்கும் மேற்பட்ட தேசிய மற்றும் சர்வதேச அளவிலான பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

இந்திய பொருளாதாரம் மற்றும் உலகின் தெற்கு நாடுகளின் பொருளாதாரம் குறித்து இம்மாநாட்டில் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

<<<<<>>>>>

உத்தராகண்ட் மாநிலம் சமமோலி மாவட்டத்தில் உள்ள **Chaukhamba** சிகரத்தில் மலையேற்ற பயிற்சியில் ஈடுபட்ட அமெரிக்கா மற்றும் பிரிட்டனை சேர்ந்த இரண்டு பேரை பத்திரமாக மீட்ட இந்திய விமானப்படையினருக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.

கடல்மட்டத்தில் இருந்து 18 ஆயிரத்து 500 அடி உயரம் கொண்ட இந்த மலையில், இந்த இரண்டு பெண்களும் மலையேற்ற பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது மோசமான வானிலை காரணமாக பாதிப்புக்குள்ளாயினர்.

இவர்களை ஐ ஏ எஃப் சீட்டா விமானம் மூலம் கண்டுபிடித்த இந்திய விமானப்படையினர் அவர்களை பத்திரமாக மீட்டுள்ளனர்.

இந்த இரண்டு பெண்களும் ஆம்ஸ் சிகரத்தில் மலையேற்ற பயிற்சியில் ஈடுபட்டு வருபவர்கள்.

<<<<<>>>>>

இலங்கையில் கடந்த 2019-ஆம் ஆண்டு நிகழ்ந்த ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் குறித்து உரிய விசாரணை நடத்தப்படும் என்று அந்நாட்டு அதிபர் திரு அனுரா குமார திசநாயகே அறிவித்துள்ளார்.

**Negombo**-வில் இந்த தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை சந்தித்து பேசிய இலங்கை அதிபர், இதுபோன்ற ஒரு துயர சம்பவம் மீண்டும் நிகழாத வண்ணம் உள்நாட்டு பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் உரிய நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த விவகாரத்தில் இதுவரை எடுக்கப்பட்ட எந்த முடிவுகளையும் சாராமல் தன்னிச்சையாக முழு விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் திரு அனுரா குமார திசநாயகே தெரிவித்தார்.

முன்னதாக, இன்று காலை ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்ட தேவாலயத்திற்கு சென்று, இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு இலங்கை அதிபர்  மலரஞ்சலி செலுத்தினார்.

கடந்த 2019 –ஆம் ஆண்டு ஏப்ரல் 21-ஆம் தேதி இந்த தேவாலயத்தில் நடந்த தாக்குதலில் 274 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

<<<<<>>>>>

லெபனானில், இஸ்ரேலிய படையினர் நடத்திய தாக்குதலில் 21 பேர் உயிரிழந்தனர்.

இஸ்புல்லா மற்றும் ஹமாஸ் போராட்டக்காரர்களை குறிவைத்து வடக்கு லெபனானில் உள்ள அகதிகள் முகாம் மீது, இஸ்ரேலிய விமானப்படையினர் குண்டுவீசி தாக்கியதில் இவர்கள் கொல்லப்பட்டனர்.

லெபானானை சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள், பாலஸ்தீனிய அகதிகள் உள்ளிட்டோர் இந்த தாக்குதலையடுத்து வேறு இடங்களுக்கு செல்வதற்கான முயற்சியை மேற்கொண்டு வருவதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அப்பாவி அகதிகள் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பிரான்ஸ் அதிபர் திரு இமானுவேல் மெக்ரான், இஸ்ரேல் நாட்டுக்கு ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்தி வைக்குமாறு கூறியுள்ளார்.

காஸா அமைப்பினர் மீது தாக்குதல் நடத்தப்படுவதை பிரான்ஸ் விரும்பாத நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளிக்கும் விதமாக செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேத்தன்யாகு, ஈரான் நாட்டின் உதவியுடன், இஸ்ரேல் மீது நடத்தப்படும் கண்மூடித்தனமான தாக்குதலில் சம்பந்தப்பட்ட அமைப்பினர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பல நாடுகள் தெரிவித்து வருவதாகவும் கூறினார்.

<<<<<>>>>>

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாதில் பாகிஸ்தான் தெஹ்ரிக் ஈ இன்சாஃப் அமைப்பினர் தொடர்ந்து இரண்டாவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வருவதால், பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது.

அந்நாட்டின் கைபர் பத்துன்கவா மாகாணத்தில் முதலமைச்சர் அலி அமின் கந்தபூர் காணாமல் போனதையடுத்து, திரு இம்ரான்கான் தலைமையிலான பாகிஸ்தான் தெஹ்ரிக் ஈ இன்சாஃப் அமைப்பினர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

கட்சி தலைமையிடமிருந்து உரிய அறிவிப்பு வரும் வரை போராட்டத்தை தொடரப்போவதாக போராட்டக்காரர்கள் கூறியுள்ளனர்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை மகளிர் ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி ஆறு விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வென்றது.

துபாயில் இன்று நடைபெற்ற போட்டியில் முதலில் பேட் செய்த பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் எட்டு விக்கெட் இழப்பிற்கு 105 ரன் எடுத்தது.

106 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய அணி 18 புள்ளி ஐந்து ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 108 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

-----------

இந்தியா – பங்களாதேஷ் இடையேயான முதலாவது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்னும் சற்றுநேரத்தில் குவாலியரில் தொடங்குகிறது.

இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

----------

ஹங்கேரியில் நடைபெற்று வரும் உலக சேலஞ்ச் கோப்பை ஜிம்னாஸ்டிக் போட்டியின் இறுதியாட்டத்திற்கு இந்திய வீரர் யோகேஸ்வர் முன்னேறியுள்ளார்.

---

ஆடவர் **Parallel Bar** மற்றும் **Horizontal Bar** பிரிவில் அவர் இறுதியாட்டத்தில் பங்கேற்கும் எட்டு பேரில் ஒருவராக தேர்வாகியுள்ளார்.

------------

மலேசியாவில் நடைபெறவிருக்கும் **Johor** கோப்பை ஹாக்கிப்போட்டியில் பங்கேற்கும் இந்திய இளையோர் அணியை ஹாக்கி இந்தியா இன்று அறிவித்துள்ளது.

**<<<<<END>>>>>**